would be convenient for us. I am not making this as a sort of complaint. Sir, according to the rules, we can postpone the questions to a later date but we cannot postpone them to the same day..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி நான் முன்பே இந்த மன்றத்திலே உறுப்பினர் கேட்டு, அதற்கு விளக்கம் அளித்திருக்கிறேன். உறுப்பினர் கால தாமதமாக வந்தால், உறுப்பினருடைய உரிமை பறிபோய் விடவில்லை, வாய்ப்பும் போய்விடவில்லை. அமைச்சர் நேரம் கழித்து வந்து என்னுடைய கேள்வியை நாளைக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டால், மறு நாளைக்கு அவையில் அதைக் கொண்டு வராமல் இருப்பதில்லை. இப்படி இப்படித்தான் கொண்டு வர வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு ஒத்துவராது. இதிலே ஒரு குறிப்பிட்ட திட்டத்தைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, my only request to the Chair is, that if the Hon. Chief Minister's questions can be put at the end it will be convenient for us and we should have a system by which we can take up this questions at the end.

The Hon. Thiru C. N. ANNADURAI: Sir, I endors the hon. Member's suggestion that my questions should be taken up after all the other questions are over.

3. தன்னிலை விளக்கம்

டாக்டர் எச். வி. ஹாண்டே வினா நேரத்தில் மற்றொரு உறுப்பினரைப் பற்றித் தெரிவித்த கருத்து குறித்து

Dr. H. V. HANDE: On a point of a personal explanation, Sir . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் முடிந்துவிட்ட பிறகு சொல்லலாம்.

Dr. H. V. HANDE: Sir, on a point of personal explanation, yesterday my hon. Friend Thiru Rama Arangannal raised a point of order when I said that he was very allergic to the question. I want to clarify the position. I have nothing against the hon. Member. He is a distinguished member of this House and I have the greatest respect for him. I am even prepared to withdraw the expression used at that time if it had hurt him. I was a little upset when he intervened and I thought he was putting an obstacle. I have absolutely no ill-feeling. I have the greatest regard for my colleagne Thiru Rama Arangannal. This is what I want to say by way of personal explanation.

4. வினாக்களை அமைச்சர்வாரியாக ஒவ்வொரு நாளும் வரிசைப்படுத்தல்

மு.ப. 10-00

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவித் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலோசனையை கேள்விகளைப் பொறுத்த வரையில் சிறு விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். பாராளு மன்றத்திலே எல்லா அமைச்சர்களும் ஒரு நாளிலே கேள்விகளுக்குப் பதில் சொல்வதில்லை. இன்ன இன்ன அமைச்சர்கள் இன்ன இன்ன சப்ஜெக்ட்டுகளைப் பற்றி இன்ன இன்ன நாட்களில் கேள்விகள் போடவேண்டுமென்று முறை இருக்கிறது. முதலமைச்சர் கேள்விகள் என்றால் புதன்கிழமை, அல்லது வியாழக் கிழமை என்று போட்டுவிட்டால் நிச்சயமாக சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே ஒவ்